ஓம்

தத்சத்

திருநந்திதேவர் ஆதிதிருவள்ளுவநாயனாராகிய

திருமூலதேவருக்கு உபதேசித்த

சித்தாந்தமும் வேதாந்தமுங்கடந்த நாதாந்த முடிவான

அமூர்த் பஞ்சாட்சர திருவிலையென்னும்

ஆருதார

# ஜீவோற்பத்திசிந்தாமணியும்

## தத்துவதீபிகையும்.

---

இவ்விரண்டும்

மதுரை

## ஞானனந்த சுவாமிகளால்

பார்வையிட்ட பிரதிக்கிணங்க,

T09932
R003E02

---

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

...க்கப்பட்டது.

...சென்னை

T-9932

ஓம்

தத்சத்

திருநந்திதேவர் ஆதிதிருவள்ளுவநாயனாராகிய
திருமூலதேவருக்கு உபதேசித்தருளிய
சித்தாந்தம் வேதாந்தமுங்கடந்த நாதாந்த முடிவான
அமுர்த பஞ்சாட்சர துருவநிலையென்னும்

ஆருதார

# ஜீவோற்பத்திசிந்தாமணியும்

## தத்துவதீபிகையும்

---

இவ்விரண்டும்

மதுரை

## ஞானனந்த சுவாமிகளால்

பார்வையிட்ட பிரதிக்கிணங்க

பூமகள்

T009932
Sarasvati Mahal Library. Thanjavur

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

உ

சிவமயம்

ஆருதார

# ஜீவோற்பத்தி சிந்தாமணி

## காப்பு

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைமுன் நாடு.

## நூற்பெருமை

நமசிவய மென் றுரைத்த மந்திரம்
நவ்வொடு மவ்வும்போய் மாய்கை வலமதாய்
யவ்வான ஜீவன் வவ்வுறச் சேர்ந்திடில்
சிவமினி லொன்றாய்ச் சிவமென லாமே.

## இதன்பொருள்

நகாரம்-திரோதாசத்தி-ஆத்துமாக்களைப்பிரபஞ்சத்திலே இச்சையை வருவிக்கும்.

மகாரம்-கிரியாசத்தி, ஆத்துமாக்களைப் பிரபஞ்சத்தில் மெய்யென்றழுத்தும் சிவத்திலே ஆசையை வருவித்துச் சிகாரத்தோடு கூடி நிற்பது.

நகாரம்-நின்ற சிவத்திலே ஆசையை வருவித்து மகாரத்தோடு கூடிநிற்பது.

நின்றவெழுத்து மூன்றாகும் செபிக்குமிடத்து ஒன்றாகும்.

நமசிவயமென் றோதப்பட்ட வைந்தெழுத்துக்குள்ளே ஐந்தெழுத்துண்டு. இந்த ஐந்தெழுத்தினையும் மூல அட்சரமாகிய அகாரம் - உகாரம் - மகாரம் - விந்து - நாதம் - என்கிற அட்சரங்களைச் சேர்ப்பதெப்படியெனில், சிகாரத்தில்-அகாரமும், வகாரத்தில்-உகாரமும், யகாரத்தில்-மகாரமும், விந்து-நகாரத்திலும், நாதம்-மகாரத்திலுமாம். இந்தப்படி சேர்ந்த ஐந்தெழுத்தும் ஓடுகிறவித மெப்படியெனில்.

நகாரமானது - விந்து - திரோதாசத்தி பிரபஞ்சத்திலே இச்சையை வருவிக்காமல் சிவத்திலே யிச்சையை வருவித்துச் சிகாரத்திலே ஐக்கியமானது.

மகாரமானது - நாதம் - கிரியாசத்தி பிரபஞ்சத்தை மெய்யென்றழுத்தாமல் சிவத்திலே ஆசையை மெய்யென்றழுத்தி வகாரத்தில் ஐக்கியமானது நின்ற எழுத்தை ஓத முன்சொன்ன மூன்றெழுத்தும் ஒன்றாயின.

அதெப்படியெனில், பராபரமாகிய பரமேஸ்வரன் ஆதி காலத்திலே ஆத்மாக்களை இரட்சிக்கத் திருவருள் புரிந்தமையால் பராபரையான சத்தியின் துடையில் தம்முடைய பெருவிரல் அங்குஷ்டங்கொண்டு கீறுகையினாலே பராசத்தி பொறுக்கமாட்டாமல் ஓவென்றனள். அப்போது பராபரமாகிய பரமேஸ்வரன் ஆவென்றமைத்தார். அந்தவெழுத்து அகாரமானது அப்போது பராசத்தி அடக்கமாய் ஊவென்றனள். அந்த எழுத்து உகாரமானது. இந்த இரண்

டெழுத்துக்களுஞ் சத்தியும் சிவமுமானது. இவ்விரண்டெழுத்தும் ஓரட்சரமானது எப்படியெனில்,

அகாரம் இலக்கத்தில்-8, பின்சொன்ன உகாரம் இலக்கத்தில்-2, இவ்விரண்டுமாய் தொகைக்கு 10-ஆயின.

யவ்வானது-ஜீவன் அந்தச் சீவனைச் சத்தியுஞ் சிவமுமாகக்கூடி ஆத்துமாக்களை சினேகத்தை வருவித்தது. நவ்வானது திரோதயசத்தி, இச்சினேகத்தை மெய்யென்றழுந்தி மிகவும் இருதலை யுண்டாக்கினது. மகாரமானது கிரியா சத்தி, இவை யிரண்டினும் பற்றுமல் நிற்கின்றது, யவ்வானது ஜீவன், இவையிரண்டும் விந்துநாதமானது இந்த உருக்கத்தைச் சத்தி பெருளென்றறியாமல் நின்றது. கேவலமான இருள் எப்போது பெறுவோமென்ற விகாரம் சகலமான பகல் இவையிரண்டுக்கும் இரவு பகலென்று பேர். இவையன்றி ஞானமுறைமைக்குச் சகலாவஸ்தை யென்றும் கேவலாவஸ்தை யென்றும் பெயர்.

சிதம்பரத்திலே சினேகம் யிருக்கையினுலே பராபரமாகிய பரமேஸ்வரன் மானைப்பிடிக்க மான்வேடங் கொண்டதுபோல் இராப்பகலே குருவென்று வடிவெடுத்துக்கொண்டு ஆதி கபிலமாமுனிவர் திருவள்ளுவநாயனர் வடிவமாய்த் திருக்குருந் தீசுவராகிய திருமூலதேவருக்குத் திருவாய் மலர்ந்தருளிய உபதேச வைப்பாகும்.

சி வா ய ந ம ா.

## தோற்றமும் ஒடுக்கமும் அறியும்படி பராபரமாகிய பரமேஸ்வரன் தாரதலம் படைக்கத் தானினைந்தருளி

பராபரத்தில் - பரந்தோன்றி, பரத்தில் - சிவந்தோன்றி, சிவத்தில் - சத்திதோன்றி, சத்தியில் - நாதந்தோன்றி, நாதத்தில்-விந்துதோன்றி, விந்துவில்-சதாசிவந்தோன்றி, சதாசிவத்தில் - மகேசுவரந் தோன்றி, மகேசுவரத்தில் - ருத்திரன் தோன்றி, ருத்திரனில் - விஷ்ணுதோன்றி, விஷ்ணுவில் - பிரம்மா தோன்றி, பிரம்மாவில்-ஆகாயந்தோன்றி, ஆகாயத்தில்-வாயுதோன்றி, வாயுவில் - அக்கினிதோன்றி, அக்கினியில்-அப்புதோன்றி, அப்புவில்-பிருதிவிதோன்றி, பிருதிவியில்-அன்னந்தோன்றி, அன்னத்தின்கண்ணே - நர மிருக பட்சி தாவர சங்கமாதிகள் தோன்றின.

இவ்விதமாய்த் தோன்றிய அடைவே நர மிருக பட்சி தாவர சங்கமாதிகள் அன்னசத்திலொடுங்கி, அன்னம் - பிருதிவியிலொடுங்கி, பிருதிவி-அப்புவிலொடுங்கி, அப்பு-தேயுவிலொடுங்கி, தேயு-வாயுவிலொடுங்கி, வாயு-ஆகாசத்திலொடுங்கி, ஆகாசம்-பிரம்மாவிலொடுங்கி, பிரம்மா - விஷ்ணுவிலொடுங்கி, விஷ்ணு - ருத்திரனிலொடுங்கி, ருத்திரன் - மகேசுவரத்திலொடுங்கி, மகேசுவரன் - சதாசிவத்திலொடுங்கி, சதாசிவம்-விந்துவிலொடுங்கி, விந்து - நாதத்திலொடுங்கி, நாதம் - சத்தியிலொடுங்கி, சத்தி - சிவத்திலொடுங்கி, சிவம் - பரத்திலொடுங்கி, பரம் - பராபரமாகிய பரமேஸ்வரனிடத்தில் ஒடுங்குமெனக்காண்க.

## அத்துவாதத்துவம்

அன்னத்தில்-ரஸந்தோன்றி, ரஸத்தில்-உதிரந்தோன்றி, உதிரத்தில்-மாம்சந்தோன்றி, மாம்சத்தில்-மேதைதோன்றி, மேதையில் - அஸ்திதோன்றி, அஸ்தியில் - மச்சைதோன்றி, மச்சையில் - சுக்கிலந்தோன்றி, சுக்கிலத்தில் - சுரோணிதந் தோன்றியது.

இப்படித்தோன்றிய சுக்கில சுரோணிதங்கள் அணுப் பிரமாணமுள்ள ஒருருப்போலப் பாய்ந்து குதித்துக் கண்டிப்பும் பேரிகையும்போலே கண்டித்து நடுவெளியில் ஒரு சுழுமுனை யுண்டாய் அம்முனையினடுவே ஒரு துவாரமுண்டாய் அத்துவாரத்தினடுவே இரண்டெழுத்துகளாலே அபிமந்திரித்துப் பிண்டமாகி யெழுமளவில்,

சுக்கிலம் பெருகில்-ஆணும், சுரோணிதம் பெருகில் - பெண்ணும். இந்தச் சுக்கிலச்சுரோணிதம் ரேசித்துப் பெருகில் இரட்டைப்பிண்டமாம். அப்பிண்டமானது நீர்வழியே பெருகில்-ஊமையாம். மலக்கிடையேயாகில் - மந்தனும்.

இப்படிக்குக் கெற்பவுற்பத்தி கொள்ளுங்காலத்தில் இரதக்கலையென்றும் இரஸக்கலையென்றும் இரண்டுகலைகளுண்டு.

அவற்றுள் எரிகலையிலே பிராணேந்திரியம் பாயில் இடப்பாகங்கொண்டு கிருமியென்னும் புழுச்சென்று விழுங்காமல் கன்றோடு தாய்ச்சென்று தொடர்ந்தாற்போலே பிராணவாயுவை ஆத்துமா முன்னிட்டுக்கொண்டு செல்லுமளவில் இதமகிதமென்னும் இரண்டக்ஷரமும் பின்தொடர்ந்து சென்று அச்சுக்குள் அச்சாக அவ்வென்னு மூலாட்சரத்தில் அமைத்

துப் புகழி...க் கிழிச்சலே வாசல்போலே ஓடி, அங்கிஷா ...வன்னு மந்திரக்கயிற்றாலே சுருக்கிக்கட்டி, சிவாக்ஞா சக்கரத் திடையிலே முத்திரையிட்டு தான் ஒருத்தியாய் நின்று இந் தக்கருவை வளர்க்கும்படியாய்க் கெற்ப உற்பனத்தை உதான வாயுவான மூலவாயு வளர்க்கும்.

அது எப்படியெனில், கெற்பாகுதி யென்னும் பவக்கட லில் எண்ணன வாயு வளர்க்கும்.

அது எப்படியெனில், எண்ணெயுந் தண்ணீரும்போல நிற்கிற சுக்கில சுரோணித்தைப் பாலும் நெய்யும்போலே பாய்ந்தவுடனே கற்பிக்கும் கற்பைச் சுருக்கினாற்போல வாசலை யடைத்துக் கருவை வெளியாக்கி, ஒன்றாந்திங்களில் உதிரந் திரளும், இரண்டாந்திங்களில் கொழுந்துவிட்டு அச்சு அமையும், மூன்றாவதில் மாமிசந்திரண்டு மூட்டு உருவாகும், நான்காவதிலோ தண்டமாய் நரம்பு - நாடிகளமையும், ஐந் தாவதில் பஞ்சவர்னமாய் இந்திரியகாரத்தால் அழியினும் அழியும் செழிக்கினுஞ் செழிக்கும், ஆறுமாதத்தில் அதிற் புகுந்து ஆமையின் வடிவமுற்று கால் கைகள் வகுக்கப் பட்டு நவத்துவாரங்களு முண்டாகும், ஏழாமாதத்தில் கற் பத்திலிருந்து எழுந்து முழக்கமுற்று கெற்பத்தைச் சூழ்ந்து புரளும். ஏனெனில் - (72000) நாடி நரம்புகளும் ஆறாதார மும் ஐந்தெழுத்தும் ஐம்பத்தோரட்சரமும் பஞ்சபூதத்தேவ தைகளும் தூலச்சூக்குமத்துடனே கொழுந்துவிடப் பேதை யாம், எட்டாமாதத்தில் நீட்டி முடக்கி தாயுண்ட அன்ன சாரத்தைத் தொப்புளின் வழியாகவுண்டு பிள்ளையினுடல்

வளர்ந்து தாயுடன்தோன்றி உயிருடன் ஆடும். ஒன்பதாவதில் தலை காலளவும் ரோமத்துவாரமுண்டாம், ரோமக் குருத்து அறிவுடனே உரங்கொள்ளுகையில் விசனம் பொறுக்கமாட்டாமல் ஈசுவரனை நோக்கித் தவஞ்செய்து தொழுகையுடனே பிரிந்து ஜனனத்தை யொழித்தருளவேணுமென்று வணங்கி நிற்கும், பத்தாவது மாதத்தில் நிறைந்த பிண்டமாய் மலைமேல்நின்று தலைகீழாய் விழுந்தவர்களைப் போலே அபானவாயுவின் பலத்தினாலே பூமியில் விழுந்தும் முன்னுள்ள நினைவுகளை மறவாதிருக்கும்.

இப்படி பாப்பிரமம் சிருஷ்டிப்பினாலே கர்ப்பந்தரித்து வாழ்வுபெறும்.

அப்பேர்ப்பட்ட பிராணவாயு வலப்புறமோடில் ஆண் பிள்ளையாம், இடப்புறமோடில் பெண்பிள்ளையாம், வாயுவிரண்டும் ஏகோபித்தோடில் அலியாம். அதாவது பேடி அல்லது குறியற்றது.

அந்த வேளையிலே நடந்த வாயுபேதியாமல் ஐந்துநாழிகையளவும் நடந்தியங்குமாகில் அந்தப் பிள்ளைக்கு வயது-100 அந்த அளவு குறையுமாகில் பிள்ளைக்கு வயதுங் குறையும், வாயு நிரம்பியோடில் அவையவங்களுண்டாகும். அவ்வாயு சிதறியோடில் அவையவங்கள் குறையும். முதன்மையில் கெற்பாந்தனத்தில் போகிக்கும்பொழுது மூன்று குணத்திலே ஒன்றுவது மாதாபிதாக்களுக்கு உண்டானால் மக்களுக்கும் உண்டாகும்.

அந்தவேளையில் வாயுநின்றியங்குமாகில் நிலத்தில் நிறமே பிள்ளைகளுக்கு நிறமாகும், மாதா பிதாக்களினுடைய மன

மும் குளிரும் வாயுமொன்ருகுமாகில் அந்தப் பிள்ளைக்கு மிகவும் அறிவுண்டாகும்.

மாதா பிதாக்களுக்கு அந்த மூன்றுவிதமுஞ் சிதறில் பிள்ளை மறித்துப்போம், கர்ப்பாசனத்தை விட்டு கெற்பங் கரவழியிலும் போக்கிலும் அக்கினிமிகுக்கிலும் வாயு கலங்கிலும் மலமாம். ஸ்திரீபுருஷர்களிருவருக்கும் மூலாக்கினி அதிகரித்தால் அந்த கர்ப்பஞ் சுவறிப்போம்.

இப்படி கன்மாநுபவத்திற் கீடாக எடுக்கப்பட்ட சரீரத்தில் முன்சொன்னவழியே அருந்தின அன்னுகாரமானது முப்பது நாழிகையில் எங்குற்றதெனில்.

மலஜல ரத்தமாகிய மூன்றுகூருகும். இதில் இராப்பகல் அறுபது நாழிகையில் மல ஜலமென்ற இரண்டுகூறு கழிந்துபோம். மற்ற ஒருகூருகிய இரத்தமானது சரீரத்தில் தங்கும். அந்த இரத்தமானது எழிலொருபங்கு இந்திரியமாம். மற்ற பங்குகளோவெனில், தோல்-உரோமம்-சதை-கற்பம்-மேதை-அஸ்தி-குடும்பி-பூளை-சுக்கிலம்-தியம்பு-குடல்-நரம்பு முதலிய விடங்களுக்கு முறையே எழரை நாழிகைவீதம் பரவி நிற்கும்.

இனி இந்தச்சரீரத்தில் இருவினைக்கதவுங்கூட்டி மூலச்தண்டாகிய நெடுங்கயிற்றை முகட்டுவளையாகச் சேர்த்து பழுவெலும்பாகிய வரிசையிட்டு நரம்பாகிய யாக்கையாலேகட்டி உதிரமாகிய ஜலத்தினுலே மண்கூட்டிச் சுவரேற்றி ரோமமாகிய கத்தையாலே மேய்த்து எடுக்கப்பட்ட வீட்டுக்கு நவத்துவாரமென்னும் வாசலிட்டு, அச்சமாகிய கதவுகளிட்டு

பல்லாகிய தாள்பூட்டி நாவாகிய ஓங்காரம்பாச்சிப் பண்டமாகிய பஞ்சேந்திரியங்களு முடைத்தாய் நிற்கும்.

இந்தச் சரீரத்தில் பதினாறுகதவு பூட்டிய வீணாத்தண்டும் மொழியென்னு முச்சாணை லும்பும், முச்சாண்சதையும், அஞ்சுருவும், ஆறுதெருவும், ஏழுகடலும், எட்டுதூணும், நாலுசாண் பருமனும், எட்டுச்சாண் நீளமும், முப்பத்திரண்டு முழக்குடலும் இருக்கும்.

இது மூலாதாரத்தைத் தொட்டு ஆக்ஞையளவும் பெரு நரம்புகள் (11000) சிறுநரம்பு (18000) கையிலும் காலினும் பெருநரம்பு (7000) சிறுநரம்பு (12000) நாபிதானத்தில் பெருநரம்பு (1000) சிறுநரம்பு (2000) நவத்துவாரத்துக்கும் வாசல் 9-க்கு பெருநரம்பு (1500) சிறுநரம்பு (3500) முடிவில் பெருநரம்பு (3000) சிறுநரம்பு (6000) எலும்பிலுங் குடலிலும சிறுநரம்பு (7000) ஆக நரம்பு நாடி (72000)

இனி கால்களிலும் கைகளிலும் சந்துப் பொருந்தல் (69) கழுத்துக்குக் கீழ்ச்சந்து (86) கழுத்துக்கு மேற்சந்து (83) ஆக சந்து பொருந்தல் (337)

இனி நாசியில் ஜலம் பலம்-1' எலும்பில் ஜலம் பலம்-7 மாம்சத்தில் ஜலம் பலம்-21 ஆக ஜலம் பலம் (69)

காலிலும் கையிலும் எலும்புகள் (160) மூலாதாரத்தைத்தொட்டு ஆக்ஞைபளவும் முழுயெலும்பு (30) கழுத்துக்குமேல் பொடியெலும்பு (300) இருபக்கத்திலும் எலும்பு (20) ஆக எலும்பு (510)

இனி சரீரத்தில் (மூணறைகோடி) ரோமத்துவாரங் களும், நாளொன்றுக்கு (21600) சுவாசமும் (96) தத்துவமும், (360) பலம் மாம்சமும் உழக்கு பித்தமும், ஆழாக்குச் சேத் துமமும் கூடி சரீரத்திலே நாளொன்றுக்கு நடக்கும் பிராண வாயு (12) விரல் பிரமாணம் புறப்பட்டு நாலுவிரல் பிரமாணம் கழிந்துபோய் (8) அங்குலம் உடம்பூடுருகி சப்ததாதுக்களை வளர்க்கும்.

---

## இனி ஜீவராசிகளின் வாழ்நாளின் விவர மெப்படியெனில்

வயதளவு 100-க்கு 10-வயதளவும் இளமை, 20-வயதி னளவும் வாலிபம், 25-30-40-இதுவரையில் யௌவனம், 45-50-இவைகளில் கௌமாரதிசையடைந்து ஒளி மழுங்கலுற்று பிருதிவி-அப்புவை நெருக்கும். அறுபதில் அப்பு தேயுவை நெருக்கும். 70-தேயு-வாயுவை நெருக்குதலினுல் தாது மாயா வுணர்வு பண்டுபோலே செலுத்தும். 80-வயதில் வாயு ஆகாசத்தை நெருக்கும். 90-வயதில் ஆகாசம் ஆத்துமாவை நெருக்கும். அதனுல் மலஜலம் இடைவிடாமல் ஒத்துநிற்கும். 100-வயதில் ஆத்துமா வந்தவழியை நோக்கும்.

இப்படிப்பட்ட சரீரமானது முன்சொன்ன அறுதிங்க ளில் முந்தாமல் சற்குருவின்தாளே சரணமென்று திருவுளம் பற்றி யருளிய முறைமை கூறினேம்.

தோற்றவொடுக்கம் முற்றிற்று.

---

## அத்துவாதத்துவ கலைக்ஞானம்

அட்சரம் ஆகாரம் - கரணம் - அவஸ்தை-பொறி-புலன்-இளமை-வறுமை-வேதம்-புராணம்-சரியை-கிரியை - யோகம்-மெய்ஞ்ஞானம் - இவ்விதமென்று குருவருள்செய்யச் சீடன் கேட்டுத் தெளிந்து அருட்பிரகாசத்திலே சர்வ அஞ்ஞானங் களையும் ஞானக்கினியினாலே சுட்டுப்போட்டு களிப்புற்று சிவத்துடனே நின்று தெளிவுறவே யெப்போதும் சிவஞானி யென்று ஒட்டியாணம் பூட்டி ஆனந்தமென்னும் ஞானமிர் தத்தை யருந்தி ஓம் நமாவென்னும் ஞானமுத்திரையிட்டு அழியாப் பதவியாக மோட்ச சாம்பிராச்சியத்தை யடைபவ ருக்கே சீவன்முத்தரென்று பேராம்.

இப்படிப்பட்ட பெருமையை யடையுமவர்களுக்குப் பர கதி கிடைக்காததற்குக் காரணமேதோவெனில்.

## பரகதிக்கு விலகல்

காயாபுரியென்னும் பட்டணமும், அந்திர சூத்திரமென் னும் உட்கோட்டையும், நவத்துவாரமாகிய வாசல்களும், இரணமென்னு முகப்பும், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் அரண்களும் அக்கினி மண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம் ஆகிய சொர்க்க மத்திய பாதாளமாகிய லோகங்களும், அங்காரசன் மூர்க்க ராசன் என்னும் இரண்டு ராஜர்களும், மூலப்பிரகிருதியென் னுந் துன்மந்திரியும், பஞ்சபூதர்களென்னும் பிரதானியர்களும், அலகையென்னும் வீதிகளும், இச்சாசத்தி கிரியாசத்தி யோக சத்தி ஞானசத்தி பராசத்தி யென்னும் ஊழியக்காரிகளும்,

அசவ்வையென்னும் அடப்பக்காரனும் கெர்விதனென்னும் களா ஞ்சிக்காரம் காலகர்மமென்னும் தனவானும், மனம் புத்தி சித் தம் ஆங்காரமென்னும் காணிக்காரனும், மாயாப்பிரபஞ்சமென் னும் வன்னிநாயகப்பாடிகரும், சத்த, பரிச, ரூப, ரச, கந்த மென்னும் கொல்நாயக்கர்களும், காம-குரோத-லோப-மோக- மத-மாற்சரிய-இடும்பை-அகங்காரமென்னும் கள்ளரும், இத மகிதமென்னு மல்லர்களும், ஆணவம்-மாயை-காமியம்-என்னும் கோட்டைக்காரரும், வாக்கு - பாதம் - பாணி-பாயுரு-உபஸ்தம் என்னும் கன்னக்காரரும், சாக்கிர-சொப்பன-சுழுத்தி- துரியம்- துரியாதீதமென்னும் தலையாரிகளும், அன்னமயம், பிராண மயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமய மென்னும் காலாட்களும், வாயுதேயுவென்னும் புரவிகளும், மனோபதி யென்னும் கருணீகனும், நவகோடி யென்னும் ராவுத்தனும், இருதயபாதரென்கிற தானுபதிகளும், சதகோடி மகாமந்திர மென்னும் உபதளமும், வாதபித்த சிலேத்துமமென்னும் பரி வாரமும், அஷ்டமதமென்னும் யானைகளும், நாலுவேதமென் னும் ரதங்களும், அசுத்தம் சுத்தமென்னும் தேவியரும், இரு வினையென்னும் தோழிகளும், இவர்கள் யாவரும் கூட்டமாகக் கூடிக்கொண்டு தங்களில் தாங்களே ஒருவருக்கொருவர் ஒப் புரவற்றவர்களாய் முன்னுரைத்த காயாபுரிக் கோட்டையை வளைந்துகொண்டு ஒன்பது வாசலுக்கும் அஷ்டமதமென்னும் யானைகளை விடுத்து யுத்தஞ்செய்கையில் ஒருவருக்கொரு வர் தங்களால் இந்தக் கோட்டையை ஆளுகிறதற்கு சாத் தியப்படாமல் காரிய உபாதியாலும் காரண உபாதியாலும் ஸ்தூல சூக்குமாதி தேகத்தினாலும் சதுர்விதோபாயத்தினு

லும் ஆராய்ந்து இந்தக... டையைக் கைக்கொள்ளும்படி பராபரமாயிலங்குகின்ற சற்குருநாதன் மானைப்பிடிக்க மான் சட்டையுடுத்ததுபோல திருநந்திதேவரான சற்குருநாதர் ஆதிகபிலராகிய திருவள்ளுவராய் திருமூலதேவருக்குத் திரு வாய்மலர்ந்தருளியவாறு இதயமென்னும் வில்லுக்குப் புரி யென்னும் நாணியைப்பூட்டி அறிவு யென்னும் அம்பைத் தொடுத்து குருவென்னும் இலக்குநோக்கி மூலாதாரத்தின் இரண்டுநாகு நெட்டெழுத்தின் நடுவெழுத்திலே யிருந்து வங்கென்று வளைத்து சங்கென்று சன்னிதனைய் அங்கிஷா வென்று இயங்குவித்துச் சங்கென்று ஆக்ஞையா சக்கரத் திலே புகுந்து அக்கினிமண்டலத்தில் அனைவரையுங் காண்பித் துக்கொண்டு ஆயாவாளென்னும் இடைபிங்கலை இரண்டுக்கும் படிக்கதவிட்டு ஆதிமூலமென்னும் யானையின் மேற்கொண்டு தண்டுக்குந் தனுவுக்கும் நடுக்குதத்தென்னுங் குரசுக்கயிற்றுக் குள்ளாக அன்னதானத்தி லுற்றளவில் அங்கென்று மேனோ க்கி ஆதிகாலமும் அவ்வையும் பதியுங்கொண்டு நடுவனை யென்னும் குத்திராக்கினியான பன்னிரு சமுத்திரத்திலே ஆனையை நீராட்டுவித்து ஞானபரமென்னும் காவணமிட்டு அங்கென்று மேனோக்கி யுற்றளவில் சிதகிரநாடி வழியே சென்று சந்திராபுரியென்னும் மண்டலமுங்கொண்டு அக்கினி மண்டலத்தில் அஞ்செழுத்திலேயும் ஆதித்தமண்டலத்தில் மூன்றெழுத்திலேயும் சந்திரமண்டலத்தில் ஓரெழுத்திலேயும் ஆசனமாயிருந்த பிறகு திருமண்டலாதிபன் பின்னிட்டு மந்திரியுபதேசப்படி வைத்துக் காயாபுரியென்னும் பட்டணத் தைக் கொள்ளாமற் கொண்டு அதிகாய னென்னும் பிர

பஞ்சங்களையெல்லாம் கருவோட ...து பின்பு சத்திய ஞானப் பிரகாசமான மனத்திருத்தேரிலே யெழுந்தருளிப்பின்பு அறிவு கலந்து ...ரலோகங் கொண்டருளிய பின்பு காயாபுரியை நோக்கி திருநந்திதேவர் ஆதிகபிலமஹாரிஷி திருவள்ளுவர் சாக்ஷியாகத் திருமூலதேவருக்குத் திருவுளம்பற்றி யருளிய முறைமையிலே திருமூலதேசிகர் நின்று நகை செய்தளவில் காயாபுரிப் பட்டணத்தில் யோகாதியுங்கெட்டு இரவ கெந் துருவ பதாதி சேனையும்பட்டு ஆயாக்கினி வேந்தனும் சிறப் புண்டுபோய் காயாபுரி யென்னும் பட்டணத்தில் சொர்க்க மத்திய பாதாளலோகமளவாக திருவடி வைத்துக்கொண்டு ராச்சியஞ் செய்தபடிக்கு திருநந்திதேவர் ஆதிகபிலமகாரிஷி திருவள்ளுவர் சாட்சியாகத் திருமூலதேவருக்கு அபயாஸ்த முங் கொடுத்தருளி அபிஷேகமுஞ் சூட்டி சித்தாந்தமும் வேதாந்தமுங்கடந்த நாதாந்த முடிவான அமுர்தபஞ்சாட்சர துருவநிலையில் சூக்ஷம்புகட்டி இப்படி யுணர்த்தியருளிய முறை மையை உட்பட்டுத் தேடாதவன் சிவஞானி யல்லவென்று இந்த முறையை உட்பட்டுத் தேடின பெரியோர்களுக்குப் பராபரத்தில் உத்தரங்களும் வெளியாயிருக்கும்.

பிண்டத்திற் கண்டபொருள் அண்டத்திற் காணலாம். அண்டத்திற்குள்ளது பிண்டத்து முண்டெனக்கொள்க.

ஆரூதார

ஜீவோற்பத்தி சிந்தாமணி

முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தத்துவ தீபிகை

## சரீரத்தினளவு பிரமாணாதிகளின் விவரம்

இந்தச் சரீரமானது அவரவர்கள் கையினால் 8-சாண் நீளமும், 4-சாண் பருமனும், அல்லது 96-விரற்கடை பிரமாணமுமுள்ளது.

இதற்குள் 96-தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன.

### அவையாதெனில்

வாசல்கள்-9, பொறி-10, புலன்-10, ஆதாரம்-6, மண்டலம்-3, நாடி-10, தாது-7, இராகம்-8, கோசம்-5, கரணம்-4, அவஸ்தை-5, குணம்-3, மலம்-3, வியாதி-3, ஆக-96.

### இவைகளுக்கு விவரம்

செவிகள்-2, கண்கள்-2, நாசிகள்-2, வாய்-1, குய்யம் பெண்குறி அல்லது ஆண்குறி-1, குதம் அல்லது அபான வாயு-1, ஆக வாசல்கள்-9.

சுரோத்திரம்-1, தொக்கு-1, சட்சு-1, சிங்குவை-1, ஆக்ராணம்-1, ஆக பொறிகள்-5.

## இவைகளின் இயற்கையாவன

சுரோத்திரமென்பது-செவி, இது ஆகாசத்தினிடமாய் நின்று சத்தத்தை யறியும்.

தொக்கு என்பது-உடம்பு, இது வாயுவினிடமாய் நின்று பரிசத்தை யறியும்.

சட்சுவென்பது-கண், இது தேயுவினிடமாய் நின்று ரூபத்தை யறியும்.

சிங்குவை யென்பது-நாக்கு, இது அப்புவினிடமாக நின்று ரஸத்தை யறியும்.

ஆக்ராணமென்பது-மூக்கு, இது பிருதிவியினிடமாக நின்று கந்தத்தை யறியும்.

இவைகளை ஞானேந்திரிய மென்னப்படும்.

## கன்மேந்திரியங்களாவன

வாக்கு-பாதம்-பாணி-பாயுரு-உபஸ்தம் ஆக-5.

இவைகள் முறையே வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் இவைகளாம்.

ஆகாசத்தினிடமாக நின்று வசனிப்பது வாக்கு.
வாயுவினிடமாக நின்று கவனிப்பது பாதம்.
தேயுவினிடமாக நின்று இடல் ஏற்றலானது பாணி.
அப்புவினிடமாக நின்று சலமலாதிகளைக் கழிதல் பாயுரு.
பிருதிவியினிடமாக நின்று ஆனந்திப்பது உபஸ்தம்.

இவைகள் கன்மேந்திரியங்களாம்.

## தன்மாத்திரைகளாவன

சத்தம்-பரிசம்-ரூபம்-ரஸம்-கந்தம் ஆக-5.

சத்தமானது-ஆகாசத்திலும் செவியிலு மொடுங்கும்.
பரிசம்-வாயுவிலும் உடம்பிலு மொடுங்கும்.
ரூபம்-தேயுவிலும் கண்ணிலு மொடுங்கும்.
ரஸம்-நீரிலும் நாவிலும் ஒடுங்கும்.
கெந்தம்-பிருதிவியிலும் மூக்கிலும் ஒடுங்கும்.
வசனம்-வாக்கிலும் ஆகாசத்திலும் ஒடுங்கும்.
கமனம்-வாயுவிலும் காலிலும் ஒடுங்கும்.
தானம்-தேயுவிலும் கையிலும் ஒடுங்கும்.
விசர்க்கம்-அப்புவிலும் முகத்திலும் ஒடுங்கும்.
ஆனந்தம்-பிருதிவியிலும் குய்யத்திலும் ஒடுங்கும்.

ஆக பொறி 10-க்கும் புலன்கள் 10-க்கும்
விவரமிதுவாம்.

---

## ஆதாரமாவன

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை இவைகளாம்.

## இவைகளின் விவரம்

மூலாதாரமாவன:—காலெலும்பு 2-ங் கதிரெலும்புங் கூடிய இடம் குய்யம், குய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவே குண்டலிவட்டமாய் அந்த வட்டத்துக்கு நடுவே திரிகோணமாய் அந்தத் திரிகோணத்துக்கு நடுவே நாலிதழுடைய ஒரு

புட்பவட்டமாய் கடப்பம் பூப்போன்றிருக்கும். அந்தப் புட்பத்துக்கு நடுவில ஓங்காரவெழுத்து நிற்கும். அந்த ஓங்காரத்திற்கு நடுவில் விக்கினேஸ்வரனும், வல்லபைசத்தியும் எழுந்தருளி யிருப்பார்கள். பச்சை நிறமுள்ளது. அந்த நாலிதழிலும் நிற்கும் அட்சரங்களை இதற்கு அடியில்வரும் மூலாதார சக்கரத்திற் காண்க.

இதற்குப் பிரமாணம் திருமந்திரம்

மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு
மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே
ஓமென விநாயகன் உலாவி நின்றானே.


ஒருவீடு வாசற் கிருவீடு மேலே
கருவீடு வாசற் கிருவிரல் கீழே
உருவீடு சோதியு மங்கே யுதித்தன
திருவுடை யாரிது தேர்ந்தறி வாரே.

இட்டா னறிந்திலன் ஏத்தாளுங் கண்டிலன்
தட்டா னறிந்தான் ஒருவர்க் குரைத்திலன்
மெட்டாய் வளர்ந்து அதின்மேல் விநாயகன்
அட்டாங்க யோகத் தமர்ந்திருந் தானே.

ஓங்கார மென்னும் அவளொரு பெண்ணும்
நீங்காப் பச்சை நிறம துகந்தவள்
ஆங்கார முடன் ஐவரைப் பெற்றவள்
நீங்கா சனத்தி லினிதிருந் தாளே.

---

# இது மூலாதாரம்




முக்கோணம்
நாலிதழ்கமலம்
மாணிக்கநிறம்
கணபதி
குண்டலிசத்தி
ஓங்காரம்
இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

---


இதற்கு இரண்டு விரற்கடைக்குமே லிருப்பது
சுவாதிஷ்டானமாம்.

அது நாற்சதுரமும், அச்சதுரத்தினடுவே ஆறிதழ்களை யுடைய ஒரு புட்ப வட்டமும், அதன்மத்தியிலே லிங்கபீடமும் வீணாத்தண்டினடியுமாயிலங்கி அதனடுமத்தியிலே நகார எழுத்து நிற்கும்.

அந்த நகாரத்தினடுவில் பிரம்மாவும், சரஸ்வதியும் வீற்றிருப்பார்கள்.

இது பிருதிவியின் கூறுகும். பொன்னிறமாம். அந்தப் புட்பத்தின் ஆறிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில் வரும் சுவாதிஷ்டான சக்கரத்திற் காண்க.

## இது சுவாதிஷ்டானம்




நாற்சதுரம்
ஆறிதழ்கமலம்
செம்பொன்னிறம்
பிரம்மா
சரஸ்வதி
நகாரம்

இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

இதற்கு 8-விரல் பிரமாணத்துக்குமேல் இருப்பது மணிபூரகமாம். இது கோழிமுட்டைபோல 1008-நரம்பு நாடிகளும் சூழ நாடிக்கெல்லாம் வேருள்ளது. இதை உள்ளறிவுள்ளோர் உந்திக்கமலமென்று சொல்லுவார்கள். இது தொப்புளுக்கு நேரில் அப்புஸ்தானத்தில் ஏழாம்பிறைக் கிணங்கியிருக்குமாம். இதனடுவே பத்து இதழையுடைய ஒரு புஷ்பம் வட்டமாயிருக்கும். அந்தப் புஷ்பத்தி னடுவில் மகாரவெழுத்து நிற்கும். அந்த மகாரத்திற்கு நடுவில் மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் எழுந்தருளி யிருப்பார்கள். பளிங்கு நிறமுள்ளது. அந்தப் பத்திதழிலும் நிற்கின்ற அட்சரங்களை இதற்கு அடியில்வரும் மணிபூரகச் சக்கரத்திற் காண்க.

# இது மணிபூரகம்





மூன்றும்பிறை
பத்திதழ்கமலம்
மரகதநிறம்
விஷ்ணு
லட்சுமி
மகாரம்

இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

இதற்குமேற் பத்துவிரற்கடைப் பிரமாணமுள்ள இடத்துக்குமேல் உள்ளது அனுகதமாகும். இது இருதயகமலமாம்.

தேயுஸ்தானத்தில் முக்கோணமாயிருக்கும். அந்த முக்கோண த்தினடுவில் பன்னிரண்டிதழையுடைய ஒரு புட்பவட்டமா யிருக்கும். அந்தப் புட்பத்தினடுவில் சிகாரவெழுத்து நிற்கும். அந்த சிகாரத்தினடுவில் ருத்திரனும் பார்வதியும் அமர்ந்திருப் பார்கள். அக்கினிநிறத்தையுடையது. அந்தப் பன்னிரண் டிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில்வரும் அனுகத சக்கரத்திற் காண்க.

## இது அனுகதம்




பன்னிரண்டிதழ்கமலம்
முக்கோணம்
ஸ்படிகநிறம்


உருத்திரன்
பார்வதி
சிகாரம்

இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்

இதற்குப் பத்துவிரற்கடை பிரமாணமுள்ள இடத்துக்குமேலுள்ளது விசுத்தியாம். இது கண்டஸ்தானத்திலே வாயுஸ்தானத்திலுள்ளது. அறுகோணமாயிருக்கும். அந்த அறுகோணத்தினடுவில் பதினறிதழையுடைய ஒரு புட்ப வட்டமாயிருக்கும். அந்தப்புட்பத்தினடுவே வகார வெழுத்து நிற்கும். அந்த வகாரத்தினடுவில் மகேஸ்வரனும், மகேஸ்வரியும் எழுந்தருளியிருப்பார்கள். கருநிறத்தையுடையது. அந்தப் பதினறிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கு அடியில் வரும் விசுத்தி சக்கரத்திற் காண்க.

---

# இது விசுத்தி




பதினாறிதழ்கமலம்

அறுகோணம்

மேகநிறம்

மகேஸ்வரன்

மகேஸ்வரி

வகாரம்


இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

இதற்குப் பன்னிரண்டு விரற்கடை பிரமாணமுள்ள ஸ்தானத்துக்குமேல் ஆக்ஞை லலாட பீடத்திலிருக்கின்றது. வீணாத்தண்டின் முடியுமாய் ஊடுருவிப் பொன்போன்ற வடிவமுற்று நிற்கும். நெற்றிப்புருவத்தின் வெளியாய் ஆகாசஸ்தானத்தில் மூன்றிதழையுடைய ஒரு புட்பத்தினடுவே யகாரவெழுத்தோடிணங்கி நிற்கும். அந்த யகாரத்துக்கு நடுவில் சதாசிவமும் மனோன்மணியும் எழுந்தருளி யிருப்பார்கள். மேகநிறத்தையுடையது. இதிலுள்ள அட்சரங்களை இதற்கு அடியில்வரும் ஆக்ஞை சக்கரத்திற் காண்க.

இதற்குத் திருமந்திரம்

ஐம்பதெழுத்தே அமர்ந்த வேதங்கள்
ஐம்பதெழுத்தே ஆகமாதிகள்
ஐம்பதெழுத்தின் அறிவை யறிந்தபின்
ஐம்பதெழுத்தே ஐந்தெழுத்தாமே.

# இது ஆக்ஞை




க்ஷ

மூன்றிதழ்கமலம்
வட்டம்
படிகநிறம்
சதாசிவம்
மனோன்மணி
யகாரம்

இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

---

## ஆறுதார விவரம்

மூலகாரணமாயிருக்கும் இந்தப் படத்தில் சங்கை நேரிடுமேயானால் அகமும் புறமும் ஆராய்ந்து பார்த்தால் தெரியவரலாம்.

### திருமூலர் திருமந்திரம்

ஒருவீடுவாசலுக் கிருவிரண்மேலே
கருவீடுவாசலுக் கிருவிரல்கீழே
உருவிடச்சோதியும் உணர்வதுமாங்கே
திருவுடையாளிது சேர்ந்தறிவாளே.

### மூலாதாரம்

1. குதத்திற்கும் லிங்கத்திற்கும் நடு.

### சுவாதிஷ்டானம்

2. லிங்கத்திற்கும் நாபிக்கும் நடு.

### மணிபூரகம்

3. நாபிக்கமலம்

### அனாகதம்

4. இருதயகமலம்.

### விசுத்தி

5. கண்டத்தானம்.

### ஆக்ஞை

6. லலாடத்தானம்.

### சந்திரமண்டலம்

7. மூலாதாரந்தொடங்கி ஒவ்வோரெழுத்தை முன்னிட்டுக்கொண்டு சிரசுநடுவே கோடிசூரியர் உதயமானாற்போலப் பிரகாசிக்கும். இந்த அமிர்தகலை அக்கினிமண்டலத்தை நோக்கி சோதியாய் நிற்கும்.

### ஆதித்தமண்டலம்

8. இருதயகமலத்தில் அறுகோணமாய் எட்டிதழுடைய ஒரு புஷ்பமாயிருக்கும். இதில் வாழைப்பூப்போல் கீழ் நோக்கியிருக்கும்.

அக்கினிமண்டலம்

9. பிரிதிவும் அப்பும் கூடினவிடத்தில் நாற்சதுரமாய் நடுவே முக்கோணமாய் நாலிதழுடைய ஒரு புஷ்பமாயிருக்கும். இதுவே ஆருதார விவரமாம்.

---

இனி மண்டலங்களாவன

அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், சந்திரமண்டலம், ஆக-3.

இதில் அக்கினிமண்டலமானது மூலாதாரத்திற்கு இருவிரற்கடைக்குமே லிருக்கின்றது.

ஆதித்தமண்டலம் உந்திக்கு நாலுவிரற்கடைக்குமே லிருக்கின்றது.

சந்திரமண்டலம் கோடி சந்திர சூரியர்களுதயமானதுபோல சிரத்தினடுவில் நிலையாய் நிற்கும். இதை அமுர்தகலையென்று சொல்லுவதுமுண்டு. அமுர்தம் மேல்நோக்கி அக்கினி கீழ்நோக்கி சரியாய் நிற்கும். இதற்கு நடுவில் பராசத்தி எழுந்தருளியிருப்பாள். இதற்குப் பிரமாணம்.

திருமந்திரம்

மேலைநிலத்தில் மேதகுபெண்ணே
மூலநிலத்தில் முளைத்தெழுஞ்சோதியே
ஏலவெழுப்பி யிசைந்துசந்திக்கப்
பாலருமாவார் பார்நந்தி ஆணையே.

---

## இனி நாடி 10-க்கும் விவரம்

இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு, ஆக நாடி-10.

இவைகளில் இடைகலை-பிங்கலை-சுழுமுனை இம்மூன்றும் மூலாதாரத்தைத்தொட்டு ஆருதாரம் ஆறிலும், மண்டலம் மூன்றிலும், ஊடுருவி முட்டிநின்று இடைகலை பிங்கலை இரண்டும் சுழுமுனையிலே இணங்கிக் கத்திரிக்கோல் பாக மாறி வீணாத்தண்டுக்கு வில்லுநாணிட்டாற்போல கபாலத்தை முட்டிக் குதிரைமுகமுற்று நாசியளவும் பற்றி நிற்கும்.

சிகுவை யென்னும் நாடியானது மூலாதாரத்தைத் தொடங்கி உண்ணாக்கிலே நின்று சோறும் தண்ணீரும் இவைகளை விழுங்கச் செய்யும்.

புருடன் என்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி வலது கண்ணளவாய் வந்து நிற்கும்.

காந்தாரியென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி இடது கண்ணளவாய் வந்து நிற்கும்.

அத்தியென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி வலது காதளவாய் வந்து நிற்கும்.

அலம்புடையென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி இடது காதளவாய் வந்து நிற்கும்.

சங்கினியென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி குறியின் அளவாய் வந்து நிற்கும்.

குகு யென்னும் நாடியானது மூலாதாரந் தொடங்கி அபானத்தின் அளவாய் வந்து நிற்கும்.

இந்த நாடிகளானது தேகத்தைப் போஷிக்குமாறு அன்னபானாதிகள் செல்லும் மார்க்கமாகவும், இரத்தம் நீர் இவையோட்டங்களுக்குத் தாரையாகவும், தேகத்தை வளைக்கவும், நிமிர்க்கவும், குருகவும், பெருகவும், கத்திரிக்கோல்போல் ஒன்றுக்கொன்று மாறலாகவும் கப்பிக்கயற்றைப்போல இழுத்துப் பிடித்திருக்கின்றது.

இனி வாயுக்களாவன

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன், ஆக வாயு-10.

இதனுடன் வயிரவன், முக்கியன், அந்தரியாமி, பிரவஞ்சனன் ஆகிய நான்கும் சேர வாயுக்கள்-14.

பிராணவாயுக்களாவன

பிராணவாயுவானது லலாடமத்தியிலே தோன்றி சந்திர நாடியிலே விழுந்து மூலாதாரத்திலே ஓம் என்று உதித்து நாபிச்சக்கரத்திலே ரீம் என்று முட்டி இடைகலை பிங்கலைகளிலே ஓடி கபாலத்தைச்சுற்றி நாசியின் வழியாய்ப் புறப்பட்டு நான்கு விரற்கடை பிரமாணங் கழிந்துபோய் எட்டு விரற்கடை பிரமாணமீந்து தானின்ற ஸ்தானத்திலேயே தாக்குகின்றது.

இப்படி தாக்குவது உத்தமதேகிக்கு நாழிகை ஒன்றுக்கு முன்னூற்றறுபது சுவாசமாகக் கொல்லன் துருத்திக்குட் காற்றேறுவதுபோல் ஏறும்.

இப்படி ஏறுகின்ற சுவாசமானது இராப்பகலாகிய அறுபது நாழிகையுள்ள நாள் ஒன்றுக்கு 216100-சுவாசமாச்சுது. இவ்விதமா யிணங்கி அவற்றுள்-7200-சுவாசம் வெளிப்படும். மற்றவை உள்ளடங்குமென்றறிக.

அபானவாயுவானது குதத்தையும் குய்யத்தையும் பற்றி மலமூத்திராதிகளைக் கழித்துவிடும்.

வியானன்-தோளிலேநின்று பரிசங்களை யறிவித்துக் கலைகளை நிறைவிக்கும்.

உதானன்-உதராக்கினியை யெழுப்பி உண்ட அன்ன சாரத்தை நாடிகளிற் செலுத்திச் சரீரத்தை வளர்க்கும்.

சமானன்-இவை யாவையும் சமப்படுத்தி பேதமில்லாமல் நிரவலாகி வைக்கும்.

கூர்மன்-நகைப்பும், முகலட்சணமும், கண்களிப்பும், புளகமும், மயிர்க்கூச்சலும், கொட்டாவியு முண்டாக்கும்.

நாகன்-முக்கலும், சோம்பலும், திமிரலும், விக்கமும், வீங்கலு முண்டாக்கும்.

கிரிகரன்-புருவமெற்றுவித்தும், தும்முவித்தும், அழுவித்தும் திரியும்.

தேவதத்தன்-விழிக்கும்பொழுது வஞ்சித்து ஓட உலாவ யுத்தஞ்செய்யத் தலைப்படும்.

தனஞ்சயன்-பிராணன் சரீரத்தைவிட்டு வெளிப்பட்ட போதிலும் தான் பிரியாது நின்று உடம்பை வீங்குவித்தும் விரிவித்தும் புழுவித்தும் கொய்தும் கபாலத்தைப் பிளந்து போம்.

வயிரவன்-காலெலும்புங் கதிரெலும்புங் கூடின விடத் திலேநின்று உடம்பில் அவஸ்தையுண்டாக்கி ஈளை இருமல் முதலான நோய்களை யுண்டாக்கும்.

முக்கியன்-கையெலும்பு 2-ம், கதிரெலும்புங் கூடியவிடத் திலேநின்று சரீரத்தின் யாக்கைகளைச் சிறக்க நிறுத்தும்.

அந்தரியாமி-புருஷனுக்கு வாகனமாய் நின்று பிராண வாயுவைத் தோற்றுவிக்கும்.

பிரவஞ்சனேவெனில்-பிரணவத்துக்கிருப்பிடமாயிருந்து பிரவஞ்சனும் அந்தரியாமியும் சரீரத்திற்கு அடையாணியாக வும் அச்சாணியாகவும் இருப்பார்கள்.

---

### தாதுக்களாவன

ரசம், உதிரம், மாம்ஸம், மேதை அஸ்தி, மச்சை, சுக் கிலம் ஆக-7.

### இராகங்களாவன

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, அகங்காரம் ஆக-8.

இவைகளில் காமமாவது-ஆசை. குரோதமாவது-கோபம். லோபமாவது - உள்ளதை யொளித்தல், பொச்சரிப்புக் கொள்கை. மோகமாவது-தானல்லாததார் மரித்தால் தான்மரித் தாற்போலிருக்கை. மதமாவது - கர்வமுற்றுத் தானதர்ம பரோபகாராதிகளை விலக்குதல். மாச்சரியமாவது - ஒன்றைக் கண்டு மகிழ்தல். இடும்பையாவது-தானே சர்வாதிகாரியென்று நினைத்து யாவரையும் இகழ்தல். அகங்காரமாவது-தன் குற்றங் களை யறியாது பிறர்சொல்லைக் கேட்டுக் கோபித்தல்.

---

## கோசமாவன

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் ஆக-5.

இவைகளில் தாதுக்களாலெடுத்தது அன்னமயகோசம்.

அன்னசாரத்தினாலே பிராணனும் பலனும் அடங்கியது பிராணமயகோசம்.

பலத்தினாலே வந்து தோற்றப்பட்டது மனோமயகோசம்.

அம்மனத்தின்கண்ணே தோற்றப்பட்டது விஞ்ஞான மாதலால் அது விஞ்ஞானமயகோசம்.

ஆனந்தமயமானது - வித்தையால் அல்லது கல்வியால் ஞானம்வந்து தோற்றும். அது ஆனந்தமயகோசம்.

இதற்குப் பிரமாணம்

சித்தியார்

விருத்தம்

தூலமாமன்னகோசம் தூலத்திற்பிராணனுற்றால்
வாலியபிராணகோசம் மன்னுமிம்மனோமயத்தால்
சாலவேபுத்தியுற்றால் தருமம்விஞ்ஞானகோசம்
ஏலவேவிடயமுன்போ லியன்றதுகோசமாமே.

அந்தக்கரணங்களாவன

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆக-4.

இவைகளில் மனம்-நினைக்கும், புத்தி-நிச்சயிக்கும், அகங்காரம் - கொண்டெழுப்பும், சித்தம் - மூன்றுக்கும் காரணமாயிருக்கும்.

இதற்குப் பிரமாணம்

சித்தியார்

விருத்தம்

மனதுக்கு விவரம்

ஐயமுஞ்சலனமு நிற்கச்செய்தலும்
வெய்யவெங்கொடுமையும் விதப்பமேவலும்
பொய்யதுவுணர்த்தலும் பொருத்தநோக்கலும்
மையல்கொண்டிடதலு மறிவுமாண்மையும்.

## புத்திக்கு

அருளுறவிருத்தலும் அபயங்காத்தலும்
மருளறுபுண்ணிய பாவமாட்சியும்
தெருளுறுவிகாரமுந் திடப்படுத்தலும்
பொருட்டுறுமூவகைப் புத்தியாகுமே.

## அகங்காரத்துக்கு

பாகமூர்க்கமும் பண்பிலாண்மையும்
மோகமுஞ்செயவெண் முடிவிலாமையும்
சோகமுங்கீழ்மையும் துரோகசொப்பனம்
மாய்கையுஞ்செய்யுமாங் காரமாதலால்.

## சித்தத்துக்கு

அருந்தவமுயற்சியு மடிகள்பேணலும்
விருந்தெதிர்கொள்கையும் மேன்மைவாழ்தலும்
வருந்தினர்யாவரு மேத்தவாழ்தலும்
திருந்தியவிச்செயல் சித்தமாகுமே.

## அவஸ்தைகளாவன

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆக-5.

இவ்வைந்தினுள் சாக்கிரமானது புருவமத்தியில் நின்று ராஜ ஓலக்கம்போல சதுரங்க பலத்துடனே யிருந்து சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் இவ்வைந்துடனும், வசன, கமன, தான, விசர்க்க, ஆனந்தமென்னும் அவ்வைந்துடனும், மனம்,

புத்தி, சித்தம், அகங்காரம் இந்த நாலும்சேர்ந்து கருவிகளுடன் சந்நிதியில் சேவிக்கத் தான் பராசத்தியருளாலே வியக்தனால் சுகதுக்கங்களை அறிந்துநின்றபோது சாக்கிரமாயின.

இதற்குப் பிரமாணம்

திருமந்திரம்

கண்டனவைந்துங் கலந்தவோரைந்தும்
உண்டனநான்கும் ஓங்கியதுணர்ந்தபின்
பண்டையினாதி பரந்ததுசாக்கிரம்
அண்டமுந்தானு யமர்ந்ததுகாணே.

சொப்பனமாவது கருவி கரணாதி 14-ல் கருவி பத்தும் கண்டத்தில் நிற்கும்.

மற்றக் கரணாதி 4-ம் சுழுத்தியோடு சீவாத்துமாவைக் கூடி சுவாசவிருதயத்திலே நின்றபோது கண்டவை கேட்டவை ஒன்றும் பிறர்க்குச் சொல்லப் புலப்படாதபோது சுழுத்தியாம்.

இதற்குப் பிரமாணம்

திருமந்திரம்

ஆனமனமும் அறிகின்றபுத்தியும்
ஊனையிழந்து நின்றுள்ளேஉயிர்ப்பெய்தி
தானமிழந்து தயங்கியவாறுபோல்
ஊனையிழந்த சுழுத்தியதாமே.

துரியமாவது சுழுத்தியைவிட்டுக் காரணமொன்றுடனே சீவாத்துமா நாபிஸ்தானத்தில் நின்றபோது உச்வாசம் நிசுவாசம் பிறக்கும். ஆகையால் இதற்குத் துரியமென்று பெயர்.

இதற்குப் பிரமாணம்

திருமந்திரம்

தானத்தெழுந்து திரியுந்துரியதானம்
வானத்தெழுந்துபோய் வையம்பிறக்கிட்டுக்
கானத்தெழுந்து கருத்தின்தலையிலே
ஊனைத்தவிர்ந்து ஒளித்திருந்தானே.

கருவிகாணுதி பதினாலும் பற்றற்றுச் சீவாத்துமா தானே மூலாதாரத்திற் சென்றேங்கி மலம், மத்தம், மாய்கை, பரிசங்களை யறியாமல் நின்றபோது துரியாதீதமென்று பேராம்.

திருமந்திரம்

துரியமிருப்பது சாக்கிரத்துள்ளே
நரியன்பதினான்கும் நஞ்சுண்டற்றது
பரியபுரவியும் பாரிப்பரந்திடத்
துரியமிருந்திடஞ் சொல்லவொண்ணாதே.

கேவலாவஸ்தையாவன

அதீதத்தை முதலாகக்கொண்டு ஒருவனை முன்னொரு காலத்தில் நாமறிந்திருக்க அவன் சிறிது நாளைக்குப்பிறகு நமது முன்வந்து என்னை யறிவீராவென்ன, நானறியேனென்று

நின்றவிடம் அதீதம். அதைக்குறித்து நிதானித் துணரு மிடம் துரியம். ஆமோ அல்லவோ வென்று சந்தேகிக்கு மிடம் சுழுத்தி. மனத்தோற்றமுற்றது சொப்பனம். இன்னதென்று நிச்சயித்துரைப்பது சாக்கிரமாம்.

இதற்குப்பிரமாணம்

அறிவானந்த சித்தியார்

முன்னே அறிந்தும் அறியாதிருந்ததுமுதலதீதம்
பின்னேநினைவின்றி மூச்சிட்டறிந்தபிறைதுரியம்
மன்னேமயங்கி யையுற்றசுழுத்திமனநினைவால்
தன்னோர்கனவது தானறிந்தொத்ததுசாக்கிரமே.

மத்தியாவஸ்தை

சாக்கிரத்திற் சாக்கிரம், சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் றுரியம், சாக்கிரத்திற் றுரியாதீதம்.

இவற்றுள் சாக்கிரத்துள் சாக்கிரமானது, கருவிகரணங்கள் பிரியாமல் ஒத்து நிற்பதாம்.

சாக்கிரத்திற் சொப்பனமானது, தான் நிச்சயம்போல் கண்டது கேட்டது சொல்லறியாததுவாம்.

சாக்கிரத்திற் சுழுத்தியானது, நினைவுமாத்திரம் பொய் யாய்ப் பிறருக்குச் சொல்லவொண்ணதிருக்கை, இது உசுவாச நிசுவாசமாக இருத்தலாம்.

சாக்கிரத்தில் துரியமானது, சகல கருவிகாணாதிகளுக்கும் அடங்கி பருமிருக்கையும் நித்திரை வருகையும், அவசமாய் விழுகையும் புருவமத்தியிலே நடுச்சக்கரத்திலே யுள்ளது.

மேலாவஸ்தையாவன

புருவமத்தியில் நடுச்சக்கரத்தில் இரண்டங்குலப் பிரமாணத்திலே யுள்ளது சொப்பனம்.

இதற்குமேல் இரண்டங்குலப் பிரமாணத்திலுள்ளது சுழுத்தி.

இதற்குமேல் இரண்டங்குலப் பிரமாணத்திலுள்ளது துரியம்.

இதற்குமேல் இரண்டங்குலப் பிரமாணத்திலுள்ளது துரியாதீதமாம்.

இதற்குப் பிரமாணம்

திருமந்திரம்

காலங்கிநீரிற் கலந்துடனாகாசம்
மாலங்கியீசன் பரமசதாசிவன்
மேலஞ்சுசென்று விரவவல்லார்க்குக்
காலனார்ஓலை கனவிலுமில்லையே.

அவஸ்தைகளாவன

சகலாவஸ்தை, கேவலாவஸ்தை, சுத்தாவஸ்தை ஆக-3.

சகலாவஸ்தையானது சாக்கிரத்தில் கருவிகாணாதிகளுடன்கூடி அந்தக்கரணங்களுக்கு நினைவாயிருக்கும்.

கேவலாவஸ்தையோ வெனில், மூலாதாரத்தைப்பற்றி ஆணவம் மேலிட்டு ஒன்றுந் தெரியாமல் கிடக்கை.

சுத்தாவஸ்தையோ, சகலாவஸ்தையில் கருவிகாணுதிக ளுடன்கூடி நின்று அலைச்சல் பிறவாமை. கேவலாவஸ்தை யில் ஆணவக்கிடையில் அறியாமை பிறவாமலும் ஆசாரியா னுக்கிரகத்தினலே இவையிரண்டிலும் பற்றுமல் சுற்றத் தோடே கூடிநிற்கை.

குணங்களாவன

ராஜஸம், தாமஸம், ஸாத்வீகம் ஆக-3.

ராஜஸமானது-அத்தி களிப்புற்றிருத்தல் அகங்காரம் போகம் அத்தசேதம் இடும்பை கீர்த்தி கொடை தருதலாம்.

தாமஸமானது-நித்திரை களவு கள்ளுண்ணல் சோம்பு வெட்டி சிரிப்பு இவைகளாம்.

ஸாத்வீகமோவெனில்-கொல்லாமை பொய்யாமை அரு வருக்கை பொறையுடைமை விரதமுடைமை அடக்கமு டைமை யாவரையும் இகழாதொழிதலாம்.

இவைகளில்

ஒவ்வொன்றுக்கும் மும்மூன்றுகுணங்கள் காண்க.

தாமஸராஜஸம் தாமஸதாமஸம், தாமஸஸாத்வீகம், தாமஸகுண விரிவே. ஸாத்வீகதாமஸம் ஸாத்வீகராஜஸம்

ஸாத்வீகஸாத்வீகமாம் ஸாத்வீகருணவிரிவே. ராஜஸதாம ஸம் ராஜஸஸாத்வீகம் ராஜஸராஜஸம் ராஜஸகுணவிரிவே.

### மலங்களாவன

ஆணவம், மாயை, காமியம் ஆக-3. இவைகளில்

ஆணவமானது-ஆத்துமாவின் அறிவைமறந்து எனதென்னும் அறியாமையெவையும் பிறப்பித்து, தன் மையும் புத்திர மித்திர களத்திராதிகளும், பிரியமாய் நாம் மயங்குகிறோமென்று இவனுக்குத் தெரியாமல் சி பித்து ஆசையுண்டாக்கிக்கொண்டு தன்னதென்றிருக்கை.

மாயையானது-வேறொருவருடைய சொத்தைத் த தென்று இடையூறு விளைவிப்பதும், உபத்திரவிக்க யத்த பதுமாம்.

காமியமானது-முந்திய இரண்டுவிதத்திற்கு ஒத்தி தும், இதாகிதத்தினுல் புண்ணிய பாவங்களை யுண்டாக்கு மாம்.

இதன்றி மகாமாயை யென்றும் திரோதான மென் இரண்டுவித மலமுண்டாகும்.

மகாமாயையானது-தனு காண புவன போகங்க கொடுத்து ஒன்றோடு ஒவ்வாமல் புசிப்புகளும் வெவ்வே அனுதியாய் ஆத்துமாவுக்கு என்னபோகந் தவிர்ந்தாலும் தத்தன்மை இரண்டுகாலத்திலும் ஒக்கும்.

ஆத்துமாவைத் தன்னிடத்திலும் இளைப்பாற்றிக்கிடத்த இடங்கொடுத்துப் பின்பு ஜனங்களுக்குப் பத்தியாயிருக்கும்.

திரோதானமானது சிவசத்தியினது பதவியைத் திரோபவித்து நின்று ஆத்துமாக்களுக்குப் புண்ணிய பாவங்களை மட்டும் புசிப்பித்து சிவசத்தியுடனே கூட்டும்.

ஈஷணை மூன்றுவன

அர்த்த ஈஷணை, புத்திரேஷணை, லோகேஷணை ஆக-3.

இவை தன்னை யடைந்தானென்பதாம்

வியாதியாவன

வாதம், பித்தம், சிலேத்துமம் ஆக-3.

இவைகளில்-வாதமானது, வாயுவிலுற்பத்தியாகிப் பிராணவாயு பிரசண்டமாய் அக்கினியும் அப்புங் கலங்கில் வாதமாம்.

அக்கினி, திசையில் வாயுகளும், ஆதாரத்தைப்பற்றி மிகவும் அனுசரித்து இருதயகமலத்தை வூன்றில் பித்தமாம்.

அப்பு, வாயு, தேயு இம்மூன்றும் உடலில் கலவாமல் கலங்கில் சிலேத்துமமாம்.

சரீரங்களாவன

ஸ்தூலம், சூக்குமம், காரணம் ஆக-3.

இவைகளில்-ஸ்தூலதேகமானது, ஆதி பிருதிவியினுல் சமைந்த உடல். சூக்கும தேகமானது ஞானேந்திரியம்-5, கன்மேந்திரியம்-5, அந்தக்கரணம்-4, பிராணவாயு-1, ஆக 15-ம் கூடியது.

இவ்விரண்டு தேகமும் பற்றற்று நிற்பது காரண தேகமாம். ஆக தத்துவம்-96-ம் சரி.

## ஆத்மாவுக்கு ஆதாரம்

இந்தச் சரீரத்தில் ஆத்மாவுக்கு ஆதாரமான கருவிகள் எவ்வயெனில்; வலதுசரம், இடதுசரம், நாபி, கண், மூக்கு, செவி, உச்சி இந்த ஏழிடங்களிலும் ஆத்மாவானது ஒன்றை விட்டு ஒன்றில் மாறிமாறி வியாபித்திருப்பதற்குத் தூலமாகிய உடம்பையே மார்க்கமாகக்கொண்டு உலாவிவருகின்றது.

## தேவதைகள்

| | |
|---|---|
| வலது சரத்திற்குத் தேவதை | சூரியன் |
| இடது சரத்திற்குத் தேவதை | சந்திரன் |
| உடம்பிற்குத் தேவதை | மகேசுரன் |
| நாபிக்குத் தேவதை | விஷ்ணு |
| கண்களுக்குத் தேவதை | ருத்திரன் |
| மூக்கிற்குத் தேவதை | பிரமன் |
| காதுகளுக்குத் தேவதை | சதாசிவன் |
| உச்சிக்குத் தேவதை | பரமசிவன் |

## இதற்குப் பிரமாணம்

## திருமந்திரம்

முப்பதுமுப்பது முப்பத்தறுவருஞ்
செப்புமதனிடை கோயிலில்வாழ்பவர்
செப்பிலதனிடை கோயில்சிதைந்தபின்
ஒக்கவவரும் ஓடெடுத்தாரே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரம் திருக்கண்டீச்சுரர்

தானெழுமங்கிநீண்டா சழக்குடைபதிக்குநாதன்
வாணிபர்தொண்ணூற்றாறு வருமிகமயக்கஞ்செய்யப்
பேணியபதிக்குணின்று பிரியும்போதறியமாட்டேன்
சேணுயர்மாடமோங்குந் திருக்கண்டீச்சுரத்துளானே.

பிரயோசனம்

தத்துவந்தொண்ணூற்றாறுந் தாழ்விலாவாயுபத்தும்
மெத்தெனநாடிபத்தும் மெய்யுள்ளே ஆறுதாரஞ்
சுத்தமாங்கரணநான்குந் தோற்றுமண்டலங்கள்மூன்றும்
இத்தனையறியவல்லா ரிறையவராகுவாரே.

தத்துவதீபிகை

முற்றிற்று.

---

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1937.

அருணகிரிநாதர் அருளிய

# திருப்புகழ்

## விருத்தியுரை

'திருப்புகழ்' முத்தமிழ்ப் புலமையும் வித்தக கவியும் வல்லவரும், மெய்ஞ்ஞானனுபூதிச் செல்வருமாகிய அருணகிரிநாதரால் அருளிச்செய்யப்பட்ட மிகச் சிறந்த நூலென்பது யாவரும் அறிந்ததொன்று. அது செந்தமிழ் இலக்கியச்செறிவும் இலக்கண வமைதியும் சாத்திரப் பொருள் அடக்கமும் பெற்றிருத்தலோடு வடமொழிக் கலப்பும் பெரிதும் உடையதாய் உளது. அன்றியும் சந்தப்பாட்டாதலின் அதன் இன்பம் நோக்கிச் சொற்கள் திரித்தும் பெய்துரைக்கப் பட்டுள்ளன. அல்லதூஉம் ஏட்டுக்கள் பல பாடபேதங்களோடும் ஆங்காங்குச் சிதைந்து பொருள் புலப்படாநிலையிற் காணப்படுகின்றன. அதனால் திருப்புகழுக்கு உரை வகுப்பது ஒரு கடினவேலையென்பது எல்லாருக்கும் இனிது விளங்கும். அத்தகைய நூலை ஒருவாறு உரையெழுதி அச்சிடவேண்டுமென்று எண்ணி முதல் 100-பாடல்களுக்கு சென்னைப் பச்சையப்பன் காலேஜ தமிழாசிரியரும், செந்தமிழ்ச்செல்வி பத்திராசிரியரும், பாவைராற்றுப்படை - புலவர்கதை - இராஜராஜன் முதலியவற்றின் நூலாசிரியருமாகிய திருவாளர் - மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் பலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக் காட்டியும், சொல்நயம் பொருணயங்களை விளக்கியும், பொருளை ஒழுங்குபடுத்தித் தூய்மைசெய்து எழுதப்பெற்று சுத்தப்பிரதியாய் வெளியிடப்பட்டிருக்கிறது.

விலை ரூபா 1-8-0

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.